திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலிருந்து கரூர் மற்றும் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிகளுக்குண்டான குடிநீரை விநியோகம் செய்ய பல்வேறு கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை கடைமடைப் பகுதிகளுக்கு 3, 4 முறை அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கின்றது. ஆனால் கடை மடைப் பகுதியான அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியினுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு இன்று வரை அமராவதியிலேயிருந்து கடைமடை வரை அந்தத் தண்ணீர் வந்து சேரவில்லை. எனவே, கரூர் மற்றும் அரவக்குறிச்சி சட்மன்றத் தொகுதிகளினுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அமராவதி ஆற்றிலேயிருந்து கடைமடை வரை தண்ணீர் வந்தடைகிற வகையிலே தண்ணீர் திறப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு எழுப்பிய இந்தப் பிரச்சினை அரசு அதிகாரிகள் வாயிலாகப் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்.

(ஆஆ) இலங்கைச் சிறையிலுள்ள தமிழக மீனவர்களை விடுவித்தல் மற்றும் காணாமல் போன தனுஷ்கோடி மீனவர்களைக் கண்டுபிடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைச் சிறையிலிருந்த 21 மீனவர்கள், இலங்கை அரசினால் விடுதலை செய்யப்பட்டு பல நாட்கள் ஆகியும்கூட, இன்றுவரை அவர்கள் தாயகம் திரும்புவதற்கு மத்திய, மாநில அரசுகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத ஒரு சூழ்நிலையில், நேற்றையதினம் இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி பகுதி மீனவர்கள மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை உடனடியாகத் தொடர்பு கொண்டு இலங்கைச் சிறையிலிருக்கின்ற அந்த மீனவர்களை